# காற்றினில் வந்த



காற்றில் வந்த உன்தன் கீதம் என்னை ,

மாற்றி அமைத்ததேன் சொல் கண்ணா !

காற்றினில்......

சேற்றில் முளைத்த செந்தாமரை போன்று ,

போற்றுவார் இன்றி இருந்த என்தனையும் ;

தேற்றியே உன் கீதம் என் மணப்புண்ணை ,

ஆற்று விக்கச் செய்து விட்டதே கண்ணா !

காற்றினில்.......

நேற்றுவரை என் திறமைகளை உணராது ,

தூற்றிவந்த என் நண்பர்கள் அனைவருமே ;

ஊற்றுபோல் பெருகிடும் என் பாடல்கேட்டு,

போற்றி புகழத்துவங்கி விட்டனரே கண்ணா !

காற்றினில்......